**சுருக்கம்**

சென்னை மாநகராட்சி – மின் ஆளுமை முறைமை அமலாக்கம் - ரூ.95,50,000/- செலவில் மென்பொருள் வாங்குதல் – நிர்வாக அனுமதி வழங்கல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.9 நாள்: 22.01.08

சர்வஜித், தை திங்கள்–8
திருவள்ளுவர் ஆண்டு –2039

**படிக்கவும்:**

1. அரசு ஆணை (நிலை) எண்.58, நிதித்துறை (BPE) நாள் 16.12.99.
2. சென்னை மாநகராட்சி ஆணையர் கடித எண்.ஈ.டி.ப்பி.சி. எண். சி. 1/486/2006, நாள் : 16.08.2007, 04.10.2007 மற்றும் 12.12.2007.

☯☯☯☯☯

**ஆணை:-**

சென்னை மாநகராட்சி ஆணையர் தனது 16.08.2007 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சியில் தற்போது பலதரப்பட்ட நிர்வாக நடவடிக்கைகளை கணினி மயமாக்கும் பணி நடைபெற்று வருகிறது என்றும், தற்போது சென்னை மாநகராட்சியில் ஒருங்கிணைந்த மின் ஆளுமை செயல்பாடுகளை எல்காட் நிறுவனம் மூலம் அமுல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். இதற்காக எல்காட் நிறுவனம், நகராட்சி மின் ஆளுமை மற்றும் சென்னை மாநகராட்சியில் கணினி பயன்பாட்டை அதிகரித்தல் ஆகிய செயல்பாடுகளை ஒருங்கிணைத்து ஒரு விரிவான திட்டத்தை தயாரித்து உள்ளது. அதன்படி கீழ்கண்ட பணிகளுக்குரிய மென்பொருள் கூறுகள் தயாரித்து மின் ஆளுமைத் திட்டம் செயல்படுத்தப்படும்.

1) வரவு–செலவு மற்றும் நிதி நிர்வாகம்.
2) சொத்துவரி நிர்ணயித்தல் மற்றும் வசூல்.
3) பிறப்பு-இறப்பு பதிவு நிர்வாகம் மற்றும் சான்றுகள் வழங்குதல்.
4) பணிகள் மேலாண்மை.
5) கொள்முதல் மற்றும் இருப்பு சரிப்பார்த்தல்.
6) கட்டிட வரைவுதிட்ட அனுமதி வழங்குதல்.
7) நிலவியல் தகவல் முறையுடன் ஒன்றிணைத்தல்.
8) குடிமக்களின் குறைதீர்க்கும் பணி.

––2–

2. மேற்குறித்த பணிகளுக்காக மென்பொருள் தயாரிக்கப்பட்டு சென்னை மாநகராட்சியில் கணினி மையம் உருவாக்கப்பட்டு 10 மண்டலம் மற்றும் 155 கோட்ட அலுவலகங்களையும் இணைத்து கணினி மயமாக்கி தலைமையகத்துடன் இணைக்கப்படும். உயர் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் கணினி பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்திற்கான முதல் 5 ஆண்டுகளுக்கான செலவு ரூபாய் 6.92 கோடிகள் ஆகும் என சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். இத்திட்ட மதிப்பீட்டுத் தொகை எல்காட் நிறுவனம் அளித்துள்ள விலைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு சென்னை மாநகராட்சி மன்ற தீர்மான எண்.332/2007 நாள் 30.07.2007ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றும் இத்திட்டத்தின் முதற்கட்ட பணிக்கு மென்பொருள் வாங்குவதற்கு ரூ.1,58,52,500/-ஐ சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து செலவு செய்ய சென்னை மாநகராட்சி மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது என்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் மேலும் தெரிவித்துள்ளார்.
மேலும் அவர்

i) சென்னை மாநகராட்சியில் மின் ஆளுமை முறைக்கு பயன்படுத்த ரூ.95,50,000/- செலவில் மென்பொருள் சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து வாங்க அரசின் நிர்வாக அனுமதி வழங்கவும்.

ii) மென்பொருள் வாங்க சென்னை மாநகராட்சியே நேரடியாக ஒப்பங்கள் கோர அரசின் அனுமதி வழங்கவும், கோரி உள்ளார்.

3. சென்னை மாநகராட்சி ஆணையர் கருத்துருவை ஆராய்ந்த அரசு அதனை ஏற்று சென்னை மாநகராட்சியில் மின் ஆளுமை முறையை அறிமுகப்படுத்தி பயன்படுத்த ரூ.95,50,000/- செலவில் சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து மென் பொருள் வாங்கவும் நேரடியாக ஒப்பங்கள் கோரவும் சென்னை மாநகராட்சி ஆணையருக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

1. பயன்படுத்தப்பட உள்ள மென்பொருளுக்கான விலை ரூபாய் 99.50 இலட்சம் என்பது உயர்ந்தபட்ச அளவாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

2. மின் ஆளுமை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான செலவு, கொள்முதல் செய்யப்பட்ட தரமான பொருள்களின் அடக்க விலையில் அதிகபட்சம் 25 சதவீதமாக நிர்ணயிக்கப்படவேண்டும்.

3) மென் பொருள்களுக்கான பராமரிப்புச் செலவு வருடத்திற்கு அதிகபட்சம் 5 சதவீதம் என நிர்ணயிக்க வேண்டும்.

4) ஏனைய பராமரிப்புச் செலவு அதிகபட்சம் 5 சதவீதம் என வரையறுக்கப்பட வேண்டும்.

4. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது (நிதித்துறை அ.சா.கு.எண்.43/நி.செ/ப்பி/08 நாள் 08.01.2008.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்.

பெறுநர்,
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை -3.
மேலாண்மை இயக்குநர், எல்காட் நிறுவனம், சென்னை– 35.
இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
குறளகம், சென்னை-108.
மாநில கணக்காயர், சென்னை-18/35.
நகல்:
மாண்புமிகு ஊராக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை
அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
நிதித்துறை, சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) (ந.நி.4)
துறை, சென்னை-9
இகோ/பிரிவு நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.